සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

4340

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය I (I කොටස)
வரலாறு I (பகுதி I)
History I (Part I)

25 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண்: .....

இலங்கை வரலாறு – ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை

முக்கியம்:

* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்தில்** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாக **ஐவைந்து** விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒரு வினாவின் சரியான விடையைத் தெரிவு செய்து அதனை இங்கு குறிப்பிடப்பட்ட **அறிவுறுத்தல்களுக்கமைய உமது விடையைக் குறித்துக் காட்டுக.**
* **இப்பகுதிக்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
* உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி I இற்கான விடைகளை எழுதிய பின்னர், பகுதி II இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.** இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலமாகும்.**

பகுதி I

● **1 - 5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தை அடைப்புப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

1. (1) அனுராதகாம (2) உபதிஸ்ஸகாம (3) உருவெலகாம
   (4) புங்ககாம (5) விஜிதகாம (.....)

2. (1) மணிமேகலை (2) ஆர்ப்பாக்கம் (3) திருவாலங்காடு
   (4) பல்லவராயன்பேட்டை (5) சிதம்பரம் (.....)

3. (1) நிசங்கமல்லன் (2) முதலாம் ஜயபாகு (3) இரண்டாம் விக்கிரமபாகு
   (4) சோடகங்கன் (5) சாகஸமல்லன் (.....)

4. (1) பேதுரு லோபேஸ் த சூசா (2) ஜெரோநிமோ த அஸவேடோ
   (3) கொன்ஸ்தாந்தினு சா த நொரோஞ்ஞோ (4) லொரொன்சோ த அல்மேடா
   (5) தியோகோ த மெலோ தகஸ்ரோ (.....)

5. (1) ஆனந்தா கல்லூரி (2) தர்மராஜ கல்லூரி (3) றோயல் கல்லூரி
   (4) இந்துக் கல்லூரி (5) ஸாஹிராக் கல்லூரி (.....)

● **6 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப் பெயர்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியை இனங்கண்டு அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

6. (1) லம்பகர்ண வம்சம் - வசப மன்னன்
   (2) மோரிய வம்சம் - தாதுசேன மன்னன்
   (3) காலிங்க வம்சம் - முதலாம் விஜயபாகு
   (4) தம்பதெனி வம்சம் - மூன்றாம் விஜயபாகு
   (5) நாயக்கர் வம்சம் - ஸ்ரீ விஜய ராஜசிங்க மன்னன் (.....)

7. (1) ஜானகிஹரண - குமாரதாஸ
   (2) கவிசிளுமின - இரண்டாம் பராக்கிரமபாகு
   (3) சத்தர்ம ரத்னாவலி - தர்மசேன தேரர்
   (4) ரசவாகினி - வேதக தேரர்
   (5) சிதத் சங்கரா - குருளுகோமி (.....)

[பக். 2 ஐப் பார்க்க

8. (1) மிகிந்தலைக் குறுஞ்சாசனங்கள் - நான்காம் மகிந்தன்
(2) அம்பகமுவ கல்வெட்டு - முதலாம் விஜயபாகு
(3) தேவநகல பாறைக் கல்வெட்டு - முதலாம் பராக்கிரமபாகு
(4) தம்புல்ல கல்வெட்டு - நிசங்கமல்லன்
(5) கலப்பாத சாசனம் - சேனாசம்மத விக்கிரமபாகு (.....)

9. (1) தர்மபால - தொம் ஜுவான்
(2) கரலியத்தே பண்டார - தொம் ஜுவான் த கஸ்த்ரோ
(3) யாமசிங்க பண்டார - தொம் பிலிப்
(4) குசுமாசன தேவி - தொனா கதரீனா
(5) கோனப்பு பண்டார - ஒஸ்திரியாவின் தொம் ஜுவான் (.....)

10. (1) ராஜகாரிய முறை ஒழிப்பு - தொமஸ் மெயிற்லாண்ட்
(2) கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி - றொபேர்ட் பிறவுண்றிக்
(3) கொழும்பு - கண்டி வீதி அமைத்தமை - எட்வேட் பார்ன்ஸ்
(4) மாநகர சபைகளை அமைத்தமை - கேர்கியூலிஸ் ரொபின்சன்
(5) தானிய வரியை நீக்கியமை - ஆதர் ஹவெலொக் (.....)

● **11 - 15** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள்/ கூற்றுகள் / திகதிகள் ஆகியவற்றின் தொகுதிகள் X, Y எனும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள **ஐந்து** சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். **சரியான** சேர்மானத்தின் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

11.

X	Y
(i) வேவல்கட்டி கல்வெட்டு	A வணிக நகரம் ஒன்றின் நிர்வாகம் தொடர்பான விதிகள்
(ii) கொண்டவட்டவான் கல்வெட்டு	B அரசர் இருவருக்கிடையிலான சமாதான உடன்படிக்கை
(iii) கோப்பிற்றிகமு தூண் கல்வெட்டு	C கிராமங்களின் நீதிமன்றங்கள் பற்றிய விதிகள்
(iv) கொடவாய கல்வெட்டு	D கிராமம் ஒன்றின் நிர்வாகம் பற்றிய விதிகள்
(v) சங்கமு விகாரை கல்வெட்டு	E துறைமுகம் மூலமான சுங்கவரிகள்

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

12.

X	Y
(i) துட்டகாமணி	A ரவிதேவ
(ii) வட்டகாமிணி அபய	B கபிசீஸ
(iii) தாதுசேன	C நந்திமித்த
(iv) முதலாம் விஜயபாகு	D மிஹார
(v) முதலாம் பராக்கிரமபாகு	E லங்காபுர

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

13.

X	Y
(i) 1562	A பலன போர்
(ii) 1594	B கன்னொருவைப் போர்
(iii) 1602	C முல்லேரியாவப் போர்
(iv) 1630	D தந்துரே போர்
(v) 1638	E ரந்தெனிவெல போர்

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

14.

X	Y
(i) றொபேர்ட் நொக்ஸ்	A கண்டி இராச்சிய அரசியலமைப்புப் பற்றிய நூல் (A sketch of the constitutiion of the Kandyan Kingdom)
(ii) ஜேம்ஸ் கோடினர்	B இலங்கை : தீவு பற்றிய ஒரு விவரணம் (Ceylon : An account of the Island)
(iii) ஜோன் டொயிலி	C இலங்கையில் ஐம்பது வருடங்கள் (Fifty years in Ceylon)
(iv) தோமஸ் ஸ்கின்னர்	D இலங்கைத் தீவுடனான ஒரு வரலாற்றுத் தொடர்பு (An Historical Relation of the Island of Ceylon)
(v) ஏமர்சன் ரெனன்ற்	E இலங்கை பற்றிய விரிவான ஒரு நூல் (A Description of Ceylon)

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

[பக். 3 ஐப் பார்க்க

15.

(i) இறக்காமம் வாவி	A வில்லியம் கிரெகரி
(ii) திஸ்மகாராம வாவி	B ஹென்றி வார்ட்
(iii) கந்தளாய்க் குளம்	C வெஸ்ட் ரிட்ஜ்வே
(iv) கலாவாவி	D ஆதர் கோர்டன்
(v) யோத வாவி	E ஹேர்கியூலிஸ் ரொபின்சன்

(1) EDABC (2) DEACB (3) CBDAE (4) CDAEB (5) BEADC (.....)

● **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவினதும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

16. மேல்வரும் பட்டியல்களில் எது உருகுணை இராச்சியத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களின் பெயர்களைக் காலக்கிரம வரிசையிற் குறிப்பிடுகின்றது.
(1) மகாநாக, யட்டாலதிஸ்ஸ, கோட்டாபய, காவன்திஸ்ஸ, துட்டகாமினி
(2) கோட்டாபய, மகாநாக, யட்டாலதிஸ்ஸ, காவன்திஸ்ஸ, துட்டகாமினி
(3) மகாநாக, கோட்டாபய, யட்டாலதிஸ்ஸ, காவன்திஸ்ஸ, துட்டகாமினி
(4) மகாநாக, யட்டாலதிஸ்ஸ, காவன்திஸ்ஸ, துட்டகாமினி, கோட்டாபய
(5) யட்டாலதிஸ்ஸ, காவன்திஸ்ஸ, துட்டகாமினி, கோட்டாபய, மகாநாக (.....)

17. மேல்வரும் பட்டியல்களில் எது காலக்கிரம வரிசையிற் கட்டப்பட்ட குளங்களின் பெயர்களைக் கொண்டுள்ளது ?
(1) திச வாவி, நாச்சதுவ வாவி, அபய வாவி, மின்னேரி வாவி, கலா வாவி
(2) அபய வாவி, திச வாவி, மின்னேரி வாவி, நாச்சதுவ வாவி, கலா வாவி
(3) அபய வாவி, திச வாவி, மின்னேரி வாவி, கலா வாவி, நாச்சதுவ வாவி
(4) நாச்சதுவ வாவி, அபய வாவி, திச வாவி, கலா வாவி, மின்னேரி வாவி
(5) திச வாவி, அபய வாவி, மின்னேரி வாவி, கலா வாவி, நாச்சதுவ வாவி (.....)

18. மேல்வரும் பட்டியல்களில் எது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் இலங்கையில் ஆட்சிபுரிந்த பிரித்தானிய தேசாதிபதிகளைச் சரியான காலக்கிரம வரிசையில் குறிப்பிடுகின்றது ?
(1) வில்லியம் ஹோட்டன், எட்வேட் பார்ன்ஸ், கோலின் கம்பெல், ஸ்ருவேட் மக்கென்சி, ரொறிங்ரன்
(2) வில்லியம் ஹோட்டன், கோலின் கம்பெல், எட்வேட் பார்ன்ஸ், ஸ்ருவேட் மக்கென்சி, ரொறிங்ரன்
(3) எட்வேட் பார்ன்ஸ், வில்லியம் ஹோட்டன், கோலின் கம்பெல், ரொறிங்ரன், ஸ்ருவேட் மக்கென்சி
(4) கோலின் கம்பெல், ஸ்ருவேட் மக்கென்சி, எட்வேட் பார்ன்ஸ், ரொறிங்ரன், வில்லியம் ஹோட்டன்
(5) எட்வேட் பார்ன்ஸ், வில்லியம் ஹோட்டன், ஸ்ருவேட் மக்கென்சி, கோலின் கம்பெல், ரொறிங்ரன் (.....)

19. மேல்வருவனவற்றுள் எப்பட்டியல் இலங்கையிற் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களைச் சரியான காலக்கிரம வரிசையிற் குறிப்பிடுகின்றது ?
(1) கோல்புரூக், டொனமூர், மனிங், மக்கலம், சோல்பரி
(2) கோல்புரூக், மக்கலம், மனிங், டொனமூர், சோல்பரி
(3) மக்கலம், கோல்புரூக், மனிங், சோல்பரி, டொனமூர்
(4) மனிங், மக்கலம், கோல்புரூக், டொனமூர், சோல்பரி
(5) கோல்புரூக், மக்கலம், டொனமூர், மனிங், சோல்பரி (.....)

20. இலங்கையின் விவசாயத்துறை அமைச்சர்களின் பெயர்களைக் கொண்ட மேல்வரும் பட்டியல்களில் எது சரியான காலக்கிரம வரிசையில் அமைந்துள்ளது ?
(1) டீ.எஸ். சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, ஒலிவர் குணதிலக, பிலிப் குணவர்தன, சீ.பீ.டீ. சில்வா
(2) டீ.எஸ். சேனாநாயக்க, ஒலிவர் குணதிலக, டட்லி சேனாநாயக்க, சீ.பீ.டீ. சில்வா, பிலிப் குணவர்தன
(3) டீ.எஸ். சேனாநாயக்க, ஒலிவர் குணதிலக, பிலிப் குணவர்தன, டட்லி சேனாநாயக்க, சீ.பீ.டீ. சில்வா
(4) டட்லி சேனாநாயக்க, டீ.எஸ். சேனாநாயக்க, ஒலிவர் குணதிலக, பிலிப் குணவர்தன, சீ.பீ.டீ. சில்வா
(5) டீ.எஸ். சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, பிலிப் குணவர்தன, ஒலிவர் குணதிலக, சீ.பீ.டீ. சில்வா (.....)

● **21 - 25** வரையுள்ள **எல்லா** வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைப் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

21. **சந்திரவட்டக்கல்**
(1) பௌத்த சமய தலங்களின் வாசலில் சந்திரவட்டக்கற்கள் வைக்கப்பட்டன.
(2) ஆதியான சந்திரவட்டக்கற்களில் நடுவில் அமைந்த அரைத் தாமரை வடிவம் தவிர வேறு செதுக்கல்கள் இடம்பெறவில்லை.
(3) கற்பனா தீதமான சீவராசிகளின் உருவங்கள் சந்திரவட்டக்கற்களிற் செதுக்கப்பட்டுள்ளன.
(4) மிகுந்த அலங்கார வேலைப்பாடுள்ள சந்திரவட்டக்கல் அனுராதபுரத்து "பிசோ மாளிகையின்" வாயிலிற் காணப்படுகின்றது.
(5) சந்திரவட்டக்கல் பிறவிக் கடல் என்பதன் அடையாளம் என்று சில அறிஞர் கருதுவர். (.....)

4340

22. **அனுராதபுரகாலத்து அரசுக்குரிய வருமானங்கள்**
(1) அரசன் பூபதி (பூமியின் அதிபதி) என்று கருதப்பட்டான்.
(2) நிலவரியே அரசனின் பிரதானமான வருமானம்.
(3) ஆதி அனுராதபுர காலத்தில் நிலவரியை போஜகபதி என்று குறிப்பிட்டனர்.
(4) நீர்வரியை தகபதியை என்று குறிப்பிட்டனர்.
(5) இக்காலத்தில் அரசினால் மரால (மரண) என்ற வரி சேர்க்கப்பட்டது. (.....)

23. **கோட்டை நகரம்**
(1) நிசங்க அளகக்கோனார் கட்டிய கோட்டையினை மூலமாகக் கொண்டது.
(2) கோட்டையினை ஸ்ரீ ஜெயவர்தனபுர என்றும் குறிப்பிட்டனர்.
(3) கோட்டை நகரத்தின் வளர்ச்சி ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சியில் உச்சநிலையை அடைந்தது.
(4) 1551ஆம் ஆண்டில் தர்மபால கோட்டை அரசனானான்.
(5) 1565இல் ஒல்லாந்தர் கோட்டை நகரத்தைக் கைப்பற்றினர். (.....)

24. **பொன்னம்பலம் இராமநாதன்**
(1) 1912ஆம் ஆண்டு பொன்னம்பலம் இராமநாதன் சட்டசபைக்கு, கல்வி கற்ற இலங்கையரின் முதலாவது பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
(2) 1915ஆம் ஆண்டு கலவரங்களைப் பிரித்தானியப் படைகள் அடக்கியபோது புரிந்த கொடுமைகளுக்கு எதிராக வாதம்புரிந்தார்.
(3) அவரே இலங்கைத் தேசிய காங்கிரசின் முதலாவது தலைவர்.
(4) யாழ்ப்பாணத்தில் 1921இல் அவர் பரமேஸ்வராக் கல்லூரியை நிறுவினார்.
(5) சர்வஜன வாக்குரிமை வழங்குவதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. (.....)

25. 1978 **ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிரதான அம்சங்கள்**
(1) நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை
(2) இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம்
(3) விகிதாசாரப் பிரதிநிதித்துவம்
(4) பாராளுமன்ற ஒம்புட்ஸ்மன்
(5) பொதுசன வாக்கெடுப்பு (.....)

● **26 - 30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று அல்லது பல சரியான** விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து

(A) யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ..... **1** எனவும்
(B) யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ..... **2** எனவும்
(C) யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ..... **3** எனவும்
(A) யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ..... **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரியாயின் ..... **5** எனவும் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்				
1	2	3	4	5
(A) யும் (B) யும் மட்டும் சரி	(B) யும் (C) யும் மட்டும் சரி	(C) யும் (D) யும் மட்டும் சரி	(A) யும் (C) யும் மட்டும் சரி	**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி

26. மேல்வரும் குறிப்புகளுள் எது / எவை பண்டுகாபயனின் ஆட்சி பற்றிச் சரியானது / சரியானவை ?
(A) அனுராதபுரத்தை இராசதானியாக அமைத்தமை.
(B) சுவர்ணபாலியைப் பண்டுகாபயன் மணம்புரிந்தான்.
(C) கிராமங்களின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டமை.
(D) நுவர வாவி கட்டப்பெற்றது. (.....)

27. ரஜரட்டை நாகரிகத்தின் தளர்ச்சி, வீழ்ச்சி என்பன தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுகளுள் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) காலிங்க மாகனின் படையெடுப்பினால் ஏற்பட்ட அழிவுகள்.
(B) நீர்ப்பாசன முறையைப் பேணிக்கொள்வதிற் கவனஞ் செலுத்தாமை.
(C) சந்திரபானுவின் படையெடுப்பு.
(D) யாழ்ப்பாண இராச்சியத்தினால் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள். (.....)

[பக். 5 ஐப் பார்க்க

28. கம்பளைக் காலம் தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) நான்காம் புவனேகபாகு கம்பளையை இராசதானியாக்கினான்.
(B) தேவிநுவரவில் உபுல்வன் கோயில் அமைக்கப்பட்டமை.
(C) யாழ்ப்பாணத்து ஆரியச்சக்கரவர்த்தி கம்பளை இராச்சியத்தின் சில பகுதிகள் மீது படையெடுத்தமை.
(D) கிரா, ஹம்ச சந்தேசங்கள் எழுதப்பட்டன. (.....)

29. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் ஆட்சிக்காலம் தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) அம்பன்வல ராலவின் கலகம்.
(B) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் நாயக்கர் வம்சத்து முதல் அரசன்.
(C) சங்கத்தாரின் (பிக்கு) உபசம்பதா சடங்கு மீண்டும் ஏற்படுத்தப்பட்டமை.
(D) 1766ஆம் ஆண்டு ஒல்லாந்தரோடு ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டமை. (.....)

30. 19ஆம் நூற்றாண்டிலே பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை பரவியமை தொடர்பாக மேல்வரும் கூற்று / கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை ?
(A) அந்நிய தேசத்தவரின் முதலீடு, அந்நிய தேசத் தொழிலாளரின் சேவை என்பவற்றை ஆதாரமாகக் கொண்டே ஆரம்பத்திற் பெருந்தோட்டங்கள் அமைக்கப்பட்டன.
(B) 19ஆம் நூற்றாண்டின் முடிவிலே தேயிலைச் செய்கை பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் முதன்மை நிலையை அடைந்தது.
(C) மலைநாட்டுப் பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்கள் பெருமளவிலே திருகோணமலைத் துறைமுகத்தினூடாகவே ஏற்றுமதி செய்யப்பட்டன.
(D) கோப்பிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந்த பின் கண்டிப் பிரதேசங்களிற் கறுவாத் தோட்டங்கள் பரவலாயின. (.....)

● **31 - 35** வரையுள்ள எல்லா வினாக்களிலும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

31. பண்டுகாபயனுக்குப் பின் அரச பதவி பெற்றவன் யார் ?
(1) சுமித்த (2) உபதிஸ்ஸ (3) முடசிவ
(4) அபய (5) பண்டுவாசுதேவ (.....)

32. எலஹர கால்வாயினை அமைத்தவன் யார் ?
(1) வசபன் (2) தாதுசேனன் (3) முதலாம் மொகலன்
(4) முதலாம் அக்ரபோதி (5) முதலாம் சேனன் (.....)

33. நிசங்கமல்லன் தென்னிந்தியாவிலுள்ள எப்பிரதேசத்தின் மீது படையெடுத்தான் ?
(1) மகாவலிபுரம்
(2) மதுராபுரம்
(3) சோமேஸ்வரம்
(4) இராமேஸ்வரம்
(5) அதிவீரராம பட்டினம் (.....)

34. கடலாதெனிய விகாரையைக் கட்டிய ஸ்தபதி யார் ?
(1) ஸ்தபதிராயர்
(2) கணேஸ்வர ஆசாரி
(3) தெவர கம்பல சில்வத்தன
(4) தேவேந்திர மூலாசாரி
(5) நிலகம அபரெண அப்பு (.....)

35. வித்தியாலங்கார பிரிவெனாவை ஸ்தாபித்தவர் யார் ?
(1) ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள தேரர்
(2) மோஹோட்டிவத்தே குணானந்த தேரர்
(3) வலனே சித்தார்த்த தேரர்
(4) ரத்மலானே தர்மாலோக தேரர்
(5) வலிவிற்றிய சோரத தேரர் (.....)

[பக். 6 ஐப் பார்க்க

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

அட்டவணை

முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
1. சரியானது	பிழையானது
2. சரியானது	சரியானது
3. பிழையானது	பிழையானது
4. பிழையானது	சரியானது
5. சரியானது	சரியானதும், முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும்.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று	
36.	இலங்கை வரலாற்று மரபில் இப்போது கிடைக்கின்ற மிகப் புராதனமான நூல் தீபவம்சம் ஆகும்.	தீபவம்சத்தின் இரண்டாம் பகுதி சூளவம்சம் எனப்படும்.	(.....)
37.	இலங்கையிலே பௌத்த சமயத்தில் முதன்முதலான பிளவு வலகம்பாவின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்டது.	வலகம்பாவின் ஆட்சிக் காலத்திலே திரிபிடகம் எழுதப்பட்டது.	(.....)
38.	ஆறாம் பராக்கிரமபாகு ஏற்படுத்திய அரசியல் இணைப்பு, 1466இல் அவர் இறந்த பின் அதிக காலம் நிலைபெறவில்லை.	1477இல் ஆறாம் புவனேகபாகு இறந்தபொழுது யாழ்ப்பாண இராச்சியம் சுதந்திரமாகிவிட்டது. கோட்டை இராச்சியம் மலைநாட்டின் மீது தனது கட்டுப்பாட்டை மீண்டும் ஏற்படுத்தக்கூடிய பலத்தைக் கொண்டிருக்கவில்லை.	(.....)
39.	பிரித்தானியர் தங்கள் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் மாத்தறைக் கோட்டையைக் கட்டினார்கள்.	கண்டியிலுள்ள தலதா மாளிகையினை ராஜாதி ராஜசிங்கன் அமைத்தான்.	(.....)
40.	இலங்கை 1948 இல் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்து கொண்டது.	எஸ்.டபிள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் பேருந்து போக்குவரத்தினையும் கொழும்புத் துறைமுகத்தையும் தேசிய மயப்படுத்தியது.	(.....)

**

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය I (II කොටස)
வரலாறு I (பகுதி II)
History I (Part II)

25 T I

இலங்கை வரலாறு - ஆதி காலம் முதல் கி.பி 1978 வரை

அறிவுறுத்தல்கள் :

* **முதலாம்** வினாவுக்கும் வேறு ஏதாவது **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு **இலங்கையின் புறவுருவப் படம்** வழங்கப்படும்).

பகுதி II

1. உமக்கு தரப்பட்ட படத்தில் மேல்வரும் இடங்கள் எல்லாவற்றையும் குறித்து, அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

   (i) ஜம்புகோள பட்டணம் (ii) ஜஜ்ஜரநதி (iii) பராக்கிரம சமுத்திரம்
   (iv) கம்பளை (v) கற்பிட்டி (vi) ஹம்பாந்தோட்டை
   (vii) சீதாவக்க (viii) கிழக்கு மாகாணம்

   (சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி ; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் 05 புள்ளிகள்)

2. "**மகாவம்சத்தின்** முதலாவது பாகம் மகாவிகாரையின் வரலாறு ஆகும்."

   (i) **மகாவம்சத்து** ஆசிரியரின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
   (ii) மகாவம்சம் எழுதிய காலத்து அரசனின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
   (iii) **மகாவம்சத்துக்கு** ஏற்பட்ட உரை நூலின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
   (iv) மகாவிகாரை பற்றிச் சுருக்கமான விளக்க உரை எழுதுக. *(03 புள்ளிகள்)*
   (v) மகாசேனனுடைய ஆட்சி முடியும் வரையுள்ள காலத்துச் சமய, அரசியல் வரலாற்றைக் கற்றுக் கொள்வதில் மகாவம்சம் பெறும் முக்கியத்துவத்தை மேலே தரப்பட்ட குறிப்பின் அடிப்படையில் நுணுகி ஆராய்க. *(08 புள்ளிகள்)*

3. மேல்வரும் தலைப்புகளில் தேவநம்பியதீசனுடைய ஆட்சிக் காலத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராய்க.

   (i) பௌத்த சமயம் அறிமுகஞ் செய்யப்பட்டமை
   (ii) பண்பாட்டு வளர்ச்சி
   (iii) முடியாட்சி வலுப்பெற்றமை *(14 புள்ளிகள்)*

4. மகாசேனனுடைய சமய, பொருளாதாரச் சாதனைகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

5. பொலன்னறுவைக் கால அரசர்களின் அயல்நாட்டுக் கொள்கையினை மேல்வரும் தலைப்புகள் குறித்து ஆராய்க.

   (i) வெளிநாடுகள் மீதான படையெடுப்புகள்
   (ii) திருமண உறவுகள்
   (iii) பண்பாட்டுத் தொடர்புகள் *(14 புள்ளிகள்)*

6. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சுருக்கமான வரலாற்றுக் குறிப்புகள் எழுதுக.

   (i) சந்திரபானு
   (ii) ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்கள்
   (iii) குருநாகல் காலத்து இலக்கியம்
   (iv) கோட்டை காலத்துக் கல்வி
   (v) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் *(ஒன்றுக்கு 07 புள்ளிகள்)*

7. இலங்கையின் கரையோர மாகாணங்களிற் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கடைப்பிடித்த கொள்கைகளை மேல்வரும் தலைப்புகள் தொடர்பாக ஒப்பிடுக.

   (i) குறிக்கோள்கள்
   (ii) சுதேச சமூக பொருளாதார நிறுவனங்களைப் பயன்படுத்தியமை
   (iii) வாணிபம்
   (iv) விவசாயம் *(14 புள்ளிகள்)*

8. "1817 - 18 ஆகிய காலத்தில் கண்டியில் நடைபெற்ற போராட்டம் இலங்கையிலே பிரித்தானியருக்கு எதிராக ஏற்பட்ட பெரும் கிளர்ச்சியாகும்".

(i) 1817இற் கிளர்ச்சி தொடங்கிய இடத்தின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(ii) கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(iii) அக்கிளர்ச்சிக்கு ஏதுவான காரணங்களைப் பற்றி ஒரு சுருக்கமான விளக்கக் குறிப்பு எழுதுக. *(05 புள்ளிகள்)*

(iv) மேலே குறிப்பிடப்பட்ட கூற்றினை நுணுக்கமாக ஆராய்க. *(06 புள்ளிகள்)*

9. (A) பகுதிக்கு **அல்லது** (B) பகுதிக்கு மட்டும் விடை எழுதுக.

(A) டொனமூர் அரசியல் அமைப்பின் பிரதான அம்சங்களை மேல்வரும் தலைப்புகள் தொடர்பாக ஆராய்க.

(i) சர்வஜன வாக்குரிமை

(ii) தேசாதிபதி

(iii) நிறைவேற்று அதிகாரமுடைய குழுமுறையும் மந்திரி சபையும் *(14 புள்ளிகள்)*

அல்லது

(B) 1972ஆம் ஆண்டுக் குடியரசு அரசியல் அமைப்பின் பிரதானமான அம்சங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

***

The National e-learning Portal for The General Education

4340

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය I வரலாறு I History I	25	T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 01

විභාග අංකය / சுட்டெண் / Index No. .....



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department
ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය **II** (I කොටස)
வரலாறு **II** (பகுதி I)
History II (Part I)

25-A T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

இந்திய வரலாறு – ஆதி காலம் முதல் கி.பி 1206 வரை

சுட்டெண்: .....

அறிவுறுத்தல்கள்:

* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாப்பத்திரத்தில்** விடை எழுதுக.
* ஒவ்வொரு வினா தொடர்பாகவும் **ஐவைந்து** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** சரியானது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, பின் அதனை இப்பத்திரத்திலேயே **அறிவுறுத்தல்களுக்கமைய குறிப்பிடுக.**
* **இவ்வினாப்பத்திரத்திற்கு 40 புள்ளிகள் வழங்கப்படும்.**
* இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் **மூன்று மணித்தியாலமாகும்.** உமது விடைத்தாள்களை ஒப்படைக்கும் பொழுது பகுதி I இற்கான விடைகளை எழுதிய பின்னர், அதனைப் பகுதி II இற்கான விடைத்தாளுடன் **இணைத்து ஒப்படைக்க வேண்டும்.**

பகுதி I

● **1 - 10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் **ஒன்று** ஏதோ காரணத்தினால் ஏனையவற்றுடன் **பொருந்தாது. பொருந்தாத** அப்பெயரை இனங்கண்டு, அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

1. (1) இந்துக்குஸ் (2) ஆரவல்லி (3) விந்தியா (4) பரோடா (5) நீலகிரி (.....)
2. (1) மகாயோகி (2) பிரம்மா (3) யோகீஸ்வரன் (4) சிவன் (5) பசுபதி (.....)
3. (1) R.D. பனேர்ஜி (2) மோர்ட்டிமர் வீலர் (3) ஸ்ரூவர்ட் பிகொட் (4) ஜோன் மார்ஷல் (5) க.அ. நீலகண்ட சாஸ்திரி (.....)
4. (1) அஸ்மக (2) லிச்சவி (3) அவந்தி (4) காந்தார (5) காம்போஜ (.....)
5. (1) நாகார்ஜுன (2) அசங்க (3) வசுபந்து (4) குமாரஜீவ (5) திக்னாக (.....)
6. (1) நாலந்தா (2) விக்கிரமசீலா (3) மதுரா (4) ஒதந்தபுரி (5) ஜகந்தல (.....)
7. (1) இந்திரப்பிரஷ்த (2) புருஷபுர (3) கௌஸாம்பி (4) கிருஷ்ண (5) பாடலி புத்திர (.....)
8. (1) வரகுணவர்மன் (2) முதலாம் மகேந்திரவர்மன் (3) இரண்டாம் நரசிம்மவர்மன் (4) முதலாம் பரமேஸ்வரவர்மன் (5) மூன்றாம் நந்திவர்மன் (.....)
9. (1) மண்டலம் (2) கொப்பம் (3) வளநாடு (4) நாடு (5) கூறம் (.....)
10. (1) மத்ஸய புராணம் (2) விஷ்ணு புராணம் (3) வாயு புராணம் (4) பெரிய புராணம் (5) ஸ்கந்த புராணம் (.....)

[பக். 2 ஐப் பார்க்க

● **11 - 15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிப்** பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒரு** சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று **பொருந்தவில்லை. பொருந்தாத** அச்சோடியைத் தெரிந்து அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

11. (1) கோலியர் - ராமகாம
(2) மோரியர் - சரஸ்வதி
(3) லிச்சவி - வைசாலி
(4) விதேகர் - மிதிலை
(5) மல்லர் - குஷிநார (.....)

12. (1) பிம்பிசார - ஹர்யங்ஹ
(2) காலாசூக - சிசுநாக
(3) தனனந்த - நந்த
(4) குணாள - மோரிய
(5) புஸ்ஸமித்திர - காண்ப (.....)

13. (1) மைத்ரிகர் - இந்திரப் பிரஷ்தம்
(2) சாலுக்கியர் - கல்யாணி
(3) பல்லவர் - காஞ்சி
(4) பாண்டியர் - மதுரை
(5) சாதவாகனர் - பிரதிஸ்தானம் (.....)

14. (1) சௌராஷ்ட்ர - கத்தியவார்
(2) இந்திரப் பிரஷ்தம் - டில்லி
(3) சாகல - சியால் கோட்
(4) பிரயாக - ஔரங்கபாத்
(5) புரிசபுர - பெசாவார் (.....)

15. (1) சந்திரகுப்த மௌரியர் - பிந்துசார
(2) சமுத்திரகுப்தர் - இரண்டாம் சந்திர குப்தர்
(3) முதலாம் இராஜேந்திரன் - முதலாம் இராஜ இராஜன்
(4) இராஜ்ய வர்த்தன - ஹர்ஷவர்த்தன
(5) தர்மபால - தேவபால (.....)

● **16 - 20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள்/ கூற்றுகள் / திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் X, Y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையிலே தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடர் ஒழுங்கிலே தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள **ஐந்து** சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். **சரியான** சேர்மானத்தைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

	X	Y
16.	(i) கடுங்கோன்	A பல்லவன்
	(ii) முதலாம் புலிகேசி	B ராஷ்ட்ரகூடன்
	(iii) மூன்றாம் கோவிந்தன்	C சாலுக்கியன்
	(iv) சிம்ம விஷ்ணு	D சோழன்
	(v) விஜயாலயன்	E பாண்டியன்

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.....)

	X	Y
17.	(i) காளிதாச	A புத்தசரிதம்
	(ii) வராஹமிஹிரர்	B சாகுந்தலம்
	(iii) பாரவி	C தசகுமார சரிதம்
	(iv) தண்டி	D கிராதார் ஜுனியம்
	(v) அஸ்வகோசர்	E பிருஹத்சம்ஹிதை

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.....)

[பக். 3 ஐப் பார்க்க

	X	Y
18.	(i) சுருதி	A வேதம்
	(ii) சோமன்	B உடன்கட்டை ஏறுதல்
	(iii) சபா	C முதியோர் அவை
	(iv) சதி	D மதுபானம்
	(v) பணி	E ஆரியரல்லாத இனக்குழு

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.....)

	X	Y
19.	(i) மாஸ்கி சிறியபாறைக் கல்வெட்டு	A கௌதமி பாலசிறி
	(ii) பித்தாரி கல்வெட்டு	B ஸ்கந்த குப்த
	(iii) நாசிக் கல்வெட்டு	C இரண்டாம் புலிகேசி
	(iv) ஜூனகார் கல்வெட்டு	D அசோகன்
	(v) ஐஹொலே கல்வெட்டு	E உருத்திர தாமன்

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.....)

	X	Y
20.	(i) புரோஹிதர்	A சேனாபதி
	(ii) சேனானி	B தேர்ச்சாரதி
	(iii) சங்கிர ஹீத்திரி	C அரசனின் ஆலோசகன்
	(iv) பாகதுக	D வரிசேர்ப்பவர்
	(v) சூத	E பாண்டாகாரன்

(1) ADCBE (2) BEDCA (3) CAEDB (4) DBAEC (5) ECBAD (.....)

● **21 - 25** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து, அதற்குரிய **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக

21. இந்துசமவெளி மக்களின் பெருந்தானியக் களஞ்சியம் எங்கு காணப்பட்டது ?

(1) மொகெஞ்ஞோதாரோ (2) ஹரப்பா (3) லொதால்
(4) ரூபார் (5) சன்ஹூதாரோ (.....)

22. பெரும்பாலான மகாயான நூல்கள் என்ன மொழியில் எழுதப்பட்டன ?

(1) பிராகிருதம் (2) பாலி (3) சமஸ்கிருதம்
(4) கரோஷ்டி (5) பிராமின் (.....)

23. வாகாடக இராச்சியத்தை ஆட்சிபுரிந்த குப்த இராசகுமாரியின் பெயரைக் குறிப்பிடுக.

(1) குபேரநாகா (2) தத்தாதேவி (3) துருவதேவி
(4) பிரபாவதி (5) குமாரதேவி (.....)

24. 'மும்முனைப் போராட்டத்தில்' ஈடுபட்ட மூன்று அரச வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(1) சாலுக்கியர், பாலர், பிரதீகாரர் (2) ராஷ்டகூடர், பிரதீகாரர், மைத்ரகர்
(3) மைத்ரகர், பிரதீகாரர், பாலர் (4) புஷ்யபூதி, பிரதீகாரர், ராஷ்டகூடர்
(5) பாலர், பிரதீகாரர், ராஷ்டகூடர் (.....)

25. கி.பி. 712 இல் சிந்து மற்றும் பஞ்சாப் பிரதேசத்தின் மீது படையெடுத்து வந்த அராபியத் தலைவனின் பெயர் என்ன ?

(1) ஹஜ்ஜி பின் யூசுஃப் (2) முகம்மது இபின் காசிம்
(3) கசினி முகம்மது (4) குதுப் உட்தின் ஐபக்
(5) சீகப் உட்தின் (.....)

[பக். 4 ஐப் பார்க்க

● **26 - 30** வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ்விடயங்களுள் **ஒன்று** உரிய தலைப்பிற்குப் **பொருந்தாதுள்ளது. அப்பொருந்தாததைத்** தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.

26. **நாணயவியல்**

(1) பெரும்பாலான உலோக நாணயங்களில் பல்வகையான அடையாளங்கள் காணப்படுகின்றன.

(2) அச்சுக்குத்திய நாணயங்களை கரிஷாப்பணம் என்றனர்.

(3) பத்திரிய கிரேக்கர் வெளியிட்ட நாணயங்கள் பெரும்பாலும் வடமேற்கு இந்தியாவில் கிடைத்துள்ளன.

(4) குப்தர் அதிக பெறுமதி வாய்ந்த நாணயங்களினை வெளியிட்டனர்.

(5) சாதவாகன மன்னர் நாணயங்களை வெளியிடவில்லை. (.....)

27. **இந்திய வேதகாலம்**

(1) வர்ணமுறை முந்திய காலத்தைக் காட்டிலும் கூடுதலாக இறுக்கமடைந்தது.

(2) பிராமணர், சத்திரியர், வைஷ்கர் ஆகியோர் மட்டுமே கல்வி கற்க முடியும்.

(3) பிராமணருக்கும் வைஷ்கருக்கும் மட்டுமே வேதங்களைப் போதிப்பதற்கு அனுமதி கிடைத்தது.

(4) ரிக்வேத காலத்தோடு ஒப்பிடும் இடத்து பெண்களுக்குக் கிடைத்த மதிப்பு குறைவடைந்தது.

(5) பிராமணர்களுடைய வாழ்க்கை நான்கு ஆசிரமங்களாக வகை செய்யப்பட்டது. (.....)

28. **கி.மு. ஆறாம் நூற்றாண்டு கண இராச்சியங்கள்**

(1) கண இராச்சியத்தின் தலைவனைச் சக்கரவர்த்தி என்று அழைத்தனர்.

(2) நீதி பரிபாலனம், நிர்வாகம் தொடர்பான விடயங்களைச் சபைகளே நிறைவேற்றின.

(3) சபையினை நடத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையினர் சமுகமளிக்க வேண்டும்.

(4) தீர்மானங்கள் எல்லாம் பெரும்பான்மையினரால் மேற்கொள்ளப்பட்டன.

(5) வழமை பற்றிய புத்தகங்களின் அடிப்படையிலே தண்டனைகள் வழங்கப்பட்டன. (.....)

29. **காளிதாசர்**

(1) இரண்டாம் சந்திரகுப்தன் காலத்து அரண்மனைக் கவிஞர்களுள் காளிதாசரும் ஒருவர்.

(2) ரகுவம்சம், குமார சம்பவம் என்பன அவர் எழுதிய தலைசிறந்த இலக்கியங்களுள் இரண்டு நூல்களாகும்.

(3) பாரவி காளிதாசரின் சீடராவார்.

(4) இலங்கை அரசனாகிய குமாரதாசன் காளிதாசரின் காலத்தவர் என்று நம்பப்படுகிறது.

(5) சந்தேச காவியங்கள் அவருடன் ஆரம்பமாகின.

(.....)

30. **புஷ்யபூதி இராஜ வம்சம்**

(1) பிரபாகர வர்த்தனன் இந்த வம்சத்தின் முதல் அரசன்

(2) பாணபட்டர் எழுதிய ஹர்ஷ சரிதம் பிரபாகர வர்த்தனனைக் குறிப்பிடுகின்றது.

(3) புஷ்யபூதி வம்சத்து இளவரசியான ராஜ்ய ஸ்ரீ கன்னோசி அரசனாகிய கிரக வர்மனை திருமணம் செய்தாள்.

(4) மாளவத்து அரசனாகிய கிரகவர்மன் தேவகுப்தனை கொலை செய்தான்.

(5) ஹர்ஷவர்த்தன அரசன் சஷாங்கன் என்னும் பெயரினையும் கொண்டிருந்தான். (.....)

[பக். 5 ஐப் பார்க்க

● **31 - 35** வரையுள்ள ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** அல்லது **பல** சரியான விடைகளாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் **(B)** யும் மட்டும் சரியாயின் ..... **1** எனவும்
(B) யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ..... **2** எனவும்
(C) யும் **(D)** யும் மட்டும் சரியாயின் ..... **3** எனவும்
(A) யும் **(C)** யும் மட்டும் சரியாயின் ..... **4** எனவும்

ஒரு விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரியாயின் ..... **5** எனவும் **புள்ளிக் கோட்டில்** எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்				
1	**2**	**3**	**4**	**5**
(A) யும் **(B)** யும் மட்டும் சரி	**(B)** யும் **(C)** யும் மட்டும் சரி	**(C)** யும் **(D)** யும் மட்டும் சரி	**(A)** யும் **(C)** யும் மட்டும் சரி	**ஒரு** விடை மட்டும் அல்லது **இரண்டிற்கு** மேற்பட்ட விடைகள் சரி

31. **இதிகாசங்கள்**

(A) மகாபாரதத்திற்கு முன்பே இராமாயணம் எழுதப்பட்டது என்று நம்பப்படுகிறது.
(B) ஆயினும் மகாபாரதத்தின் அடிப்படைக் கதையின் நிகழ்ச்சிகள் இராமாயணத்தில் உள்ளனவற்றைக் காட்டிலும் முற்பட்டவை.
(C) இராமாயணம் சங்க இலக்கியத்துள் அடங்கும். (.....)
(D) இராமாயணத்தின் ஆசிரியரான வால்மீகி காளிதாசரின் காலத்தவர்.

32. **ஜைனசமயம்**

(A) வர்த்தமான மகாவீரர் ஜைனசமயத்தின் ஸ்தாபகர் என்று கொள்ளப்படும்.
(B) ஜைனர் எல்லோரும் நிர்வாணமாக வாழ்ந்தனர்.
(C) உலக வாழ்க்கையைத் துறந்து 12 ஆண்டுகள் துறவியாக வாழ்ந்த மகாவீரர் நிகண்டர் என்று சொல்லப்படும் ஜினர் ஆனார். (.....)
(D) உலகம் பரமேஸ்வரனால் படைக்கப்பட்டது என்ற கோட்பாட்டை ஜைனர்கள் ஒப்புக்கொண்டனர்.

33. **நந்த வம்சம்**

(A) ஹர்யங்க குலத்தில் இறுதி அரசனைக் கொலை செய்தபின் நந்தர்கள் சிம்மாசனத்தைக் கைப்பற்றினார்கள்.
(B) நந்தகுல முதல்வனாகிய மகாபத்மனின் தாய் சூத்திரகுலப் பெண் என்று புராணங்கள் கூறும்
(C) மகாபத்மனின் பின் அவனது புதல்வர் எண்மரும் ஒருவர் பின் ஒருவராக ஆட்சிபுரிந்தனர்.
(D) நந்தப் பேரரசு இமயம் முதல் குமரி வரையும் காந்தாரம் முதல் வங்காளம் வரையும் பரவி இருந்தது. (.....)

34. **கலிங்கத்துச் சேதி வம்சம்**

(A) கலிங்கத்தில் மோரியர் ஆட்சியினை ஒழித்து அங்கே சேதி வம்சத்தினரின் ஆட்சியினைக் காரவேலன் ஏற்படுத்தினான்.
(B) அவன் பௌத்த சமயத்தின் பேராதரவாளன்.
(C) காரவேலன் தனது பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டில் மோரியருக்கு எதிராகப் படையெடுத்துச் சென்றான். (.....)
(D) அவனது ஆட்சிக்காலம் பற்றிய பயனுடைய விபரங்களை ஹத்திரும்பா சாசனத்திலே காணலாம்.

35. **ராஷ்ட கூடர்கள்**

(A) ராஷ்ட கூட வம்சத்து ஸ்தாபகர் தந்திதுர்க்கன்.
(B) தக்கிணத்தில் சாலுக்கியரின் ஆதிக்கம் தளர்ச்சியடைந்த பொழுது ராஷ்ட கூடர் எழுச்சி பெற்றனர்.
(C) மூன்றாம் கிருஷ்ணனின் காலத்தில் ராஷ்டகூடரின் ஆதிக்கம் உன்னத நிலையை அடைந்தது.
(D) எல்லோராவிலுள்ள பிரசித்தமான கைலாசநாதர் கோவில் ராஷ்டகூடர் காலத்துத் திருப்பணி என்று கொள்ளப்படும். (.....)

[பக். 6 ஐப் பார்க்க

● **36 - 40** வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து **அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில்** எழுதுக.

அட்டவணை

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
1.	சரியானது	பிழையானது
2.	சரியானது	சரியானது
3.	பிழையானது	பிழையானது
4.	பிழையானது	சரியானது
5.	சரியானது	சரியானதும், முதலாம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும்.

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று	
36.	காமாண்டக நீதிசாரம் கௌடில்ய அர்த்த சாஸ்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.	சிலப்பதிகாரம் அர்த்த சாஸ்திரத்தின் தமிழ் மொழியாக்கம் ஆகும்.	(.....)
37.	மகா அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவைக் கைப்பற்றி அதனைத் தனது மாகாணங்களுள் ஒன்றாக அமைத்தான்.	இந்தப் பிரதேசத்தை ஆட்சி புரிவதற்குச் செலியுக்கஸ் நிக்கேற்றர் நியமிக்கப்பட்டார்.	(.....)
38.	பாடலிபுரத்து நகராட்சி முறைபற்றி மெகஸ்தினிஸ் விபரமாக வர்ணிக்கின்றார்.	அந்த நகரத்தை முப்பது பேர் அடங்கிய சபை நிர்வாகம் செய்தது. அதில் ஆறு குழுக்கள் இருந்தன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஐவைந்து பேரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது.	(.....)
39.	தசகுமார சரிதம் பல்லவர் வம்சத்தின் உற்பத்தியினை விபரிக்கின்றது.	இறுதியிலே பல்லவர் இராச்சியத்தினை அடக்கிய பாண்டியர்கள் அதனைக் கைப்பற்றிக் கொண்டனர்.	(.....)
40.	தஞ்சாவூரிலுள்ள பிருஹதீஸ்வரர் கோயிலே தென்னிந்தியாவிலுள்ள இந்துக் கோயில்களில் மிகப் பெரியதாகும்.	அந்தக் கோவிலிலுள்ள நடராசப் படிமமே மிகப் புராதனமான வெண்கலப் படிமமாகும்.	(.....)

**

[பக். 7 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය II (II කොටස)
வரலாறு II (பகுதி II)
History II (Part II)

25-A T II

இந்திய வரலாறு – ஆதி காலம் முதல் கி.பி 1206 வரை

அறிவுறுத்தல்கள் :

* **முதலாம்** (1) வினாவுக்கும் ஏனையவற்றுள் **மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **இந்தியாவின் புறவுருவப்படம்** ஒன்று வழங்கப்படும்).

பகுதி II

1. உமக்குத் தரப்பட்ட வரைபடத்தில் மேலே குறிப்பிட்ட இடங்கள் எல்லாவற்றையும் குறித்துப் பெயரிட்டு, அவற்றுள் எவையேனும் **இரண்டினைப்** பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
(i) மொகஞ்ஞோதாரோ (ii) சுப்பாரக
(iii) மகாநதி (iv) காஞ்சி
(v) ஆரவல்லி (vi) கன்னோசி
(vii) மக்ரான் (viii) பிரதிஷ்தான்
*(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி ; சிறுகுறிப்பு ஒவ்வொன்றுக்கும் **05** புள்ளிகள்)*

2. சிந்துவெளி நாகரிகத்தின் தொடக்கம், வீழ்ச்சி என்பன பற்றிச் சொல்லப்பட்ட வெவ்வேறான விளக்கங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

3. ரிக்வேத காலத்து சமூக, சமய நிலைகள் எவ்வாறும் எக்காரணங்களினாலும் பிந்திய வேத காலத்தில் மாற்றம் அடைந்தன என்பதை விளக்குக. *(14 புள்ளிகள்)*

4. பிம்பிசாரனின் ஆட்சிக்காலம் முதல் அசோகனின் ஆட்சி முடியும் வரை மகதம் எழுச்சி பெறுவதற்கு ஏதுவாக இருந்த காரணங்களைப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

5. "தக்கணத்திலே சாதவாகனர் முதலாவது பேரரசை அமைத்தார்கள்".
(i) சாதவாகன வம்சத்து முதல் அரசனின் பெயரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*
(ii) சாதவாகனராலே தோற்கடிக்கப்பட்ட வடஇந்திய இராச்சியங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*
(iii) சாதவாகனர் காலத்துக் கலை, கட்டடக்கலை என்பன பற்றி ஒரு சுருக்கமான விளக்கவுரை எழுதுக. *(04 புள்ளிகள்)*
(iv) முன்னே சொல்லப்பட்ட கூற்றினை ஒப்புக் கொள்வீரா ? உமது காரணங்களைக் குறிப்பிடுக. *(07 புள்ளிகள்)*

6. இந்திய பண்பாட்டின் வளர்ச்சியில் குசானர் கொண்டிருந்த பங்கினை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க. *(14 புள்ளிகள்)*

7. சமுத்திரகுப்த மன்னன் நடத்திய படையெடுப்புகளை விபரிக்குக. *(14 புள்ளிகள்)*

8. மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிக் குறிப்புரை எழுதுக.
(i) கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வடஇந்தியாவில் நிலவிய இராச்சியங்கள்
(ii) மோடியப் பேரரசு சரிவுற்ற பின் வடமேற்கு இந்தியாவில் உள்ள நிலைகள்
(iii) குப்தர் காலத்தில் ஏற்பட்ட இலக்கிய வளர்ச்சி
(iv) மேலாதிக்கம் குறித்து வடஇந்தியாவில் ஏற்பட்ட 'மும்முனைப் போராட்டம்' *(ஒன்றுக்கு 07 புள்ளிகள்)*

9. (A) **அல்லது (B)** என்னும் வினாக்களில் ஒன்றுக்கு மட்டும் விடை எழுதுக.
(A) அந்நிய தேசங்களில் சோழரின் ஆதிக்கப்படர்ச்சி பரவிய வகையினைப் பரிசீலிக்குக. *(14 புள்ளிகள்)*
அல்லது
(B) காஞ்சிப் பல்லவர் காலத்துப் பண்பாட்டு வளர்ச்சிகளை விபரிக்குக. *(14 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

ඉතිහාසය II வரலாறு II History II	25-A	T

ප්‍රශ්න අංකය / வினா இல. / Question No. 01

විභාග අංකය / சுட்டெண் / Index No. .....